# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தொழில்முறை சிகிச்சையாளர் பதவி**
**(POST OF OCCUPATIONAL THERAPIST)**

**தகைமை** : **மூலப்பிரமாணம் I**

அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்முறை சிகிச்சையாளர் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

ஆ. சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் ஆறு (06) மாத கால நோக்குநிலை மற்றும் ஒருங்கிணைப்பு (orientation and co-ordination) கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
கவனிக்கவும்: வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டதாரிகள் தொடர்பில், அவர்கள் தொழில்முறை சிகிச்சையாளர்களாக செயலாற்றுவதற்கு இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

**அல்லது**

**மூலப்பிரமாணம் II**

அ. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒன்று (01) அல்லது இரண்டு (02) அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, ஆங்கில மொழி, விஞ்ஞானம் மற்றும் கணிதப் பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**மற்றும்**

ஆ. க.பொ.த (உ/த) பரீட்சையில் இணைந்த கணிதம், இரசாயனவியல், உயிரியல் அல்லது விவசாயம் உட்பட்ட பாடங்களில் இரண்டு (02) பாடங்கள் சகிதம் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் (பொது வினாப்பத்திரம் தவிர) 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

இ. சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் இரண்டு (02) வருடகால முழு நேர (உள்ளக) தொழில்முறை சிகிச்சையாளர் டிப்ளோமா கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:** விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** MT 06 தரம் III
ரூபா 72,960- 10 x1080 – 83,760/- மாதாந்தம்

**02. கண் தொழில்நுட்பவியலாளர் பதவி**
**(POST OF OPTHALMIC TECHNOLOGIST)**

**தகைமைகள்** : குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகள்:

கண் தொழில்நுட்பவியலில் B.Sc (Optometry) அல்லது உயர் டிப்ளோமா (சுகாதார அமைச்சு, இலங்கை கண் தொழில்நுட்பவியல் பாடசாலையினால் வழங்கப்பட்டது).

- இலங்கை மருத்துவ பேரவையின் பதிவு
- அத்துடன் ஒரு (01) வருடகால அனுபவம்

**வயது** : விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : MT 06 தரம் III
ரூபா 72,960- 10 x1080 – 83,760/- மாதாந்தம்

**பொதுவான நிபந்தனைகள்**

**வேலைவாய்ப்பின் நியதிகள்:**
1. நிரந்தரம் மற்றும் சேமநல நிதி அடிப்படையில்.
2. சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

ஏற்கனவே அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் திணைக்களம் / நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2026 ஜனவரி 05ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
2025-12-21